பெரிய தபாற் கந்தோரில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது

# ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை

மலர் : 7 | 1963, ஏப்பிறில் 24 ந் திகதி | இதழ் : 5

# "வாக்கி திருக்டர்"கள்

## விவசாயிகளுக்கு, விவசாய அமைச்சு அங்கீகரித்துள்ள கடன் வசதி

**விவசாயிகள் "வாக்கி திருக்டர்" களை வாங்கக் கூடியதாக ஒரு கடன் திட்டத்தை விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சு அங்கீகரித்திருக்கிறது. இக்கடனை அவர்கள் இலகுவான தவணைப் பணங்களின் அடிப்படையில் திருப்பிச் செலுத்தக் கூடியதாக இருக்கும்.**

விவசாயிகள் "வாக்கி திருக்டர்" களை வாங்குதற்கு கடன்களை விஸ்தரிக்கும் திட்டம் விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. சி. பி. டி சில்வா அவர்கள் பிறப்பித்த உத்தரவின் பேரில் கமத்தொழிற் சேவைகள் அதிகாரியின் பகுதியால் தயாரிக்கப்பட்டது.

மின்சாரக் கலப்பைகள் என்றும் வழங்கப்படும் "வாக்கி திருக்டர்" களை, நெற்காணிகளை உழுவதற்கும் சேறுக்குவதற்கும் மட்டப்படுத்துவதற்கும் உபயோகப்படுத்தமுடியும். வாக்கி திருக்டர்களுடன் சில துணை உபகரணங்களைப் பொருத்திவிட்டுச் சூடடித்தல், இழுத்தல், வீதிப் போக்குவரத்து போன்ற எண்ணற்ற வேலைகளைச் செய்யமுடியும். சில இன வாக்கி திருக்டர்களில் நீர் இறைக்கும் பம்பு ஒரு துணை உறுப்பாகப் பொருத்தப்பட்டிருக்கிறது. நீர்ப்பாசனத்தேவைகளுக்கு இதை உபயோகிக்கமுடியும்.

பல்வேறு விவசாய நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட செய்து காட்டும் முறைகள் வாக்கி திருக்டரைச் சுலபமாக இயக்க முடியும் என்பதை மட்டுமல்லாது இவ்வியந்திரம் விவசாயத்திலுள்ள கஷ்டமான நடைமுறைகளையும் இலகுவாக்கியிருக்கிறது என்பதையும் நிரூபித்துள்ளன. நெல் சாகுபடி செய்வதில் உபயோகிப்பதற்குத் தேவையான துணை உறுப்புகளுடன் கூடிய வாக்கி திருக்டர் ஒன்றின் விலை கூடியபட்சம் 2,800 ரூபா ஆகும்.

கடன்களைப் பெற்றவர்களிடமுள்ள இயந்திரங்கள் எவ்வளவு திறமையாக வேலை செய்கின்றன வென்பதை அவதானிக்கும் பொருட்டு ஆரம்பத்தில்

(3 பக்கம் பார்க்க)

## மீன் விற்பனைச் சங்கத்துக்கு குளிரூட்டும் இயந்திரங்கள்

### விவசாய அமைச்சின் சிபார்சு

**இலங்கைக் கூட்டுறவு மீன் விற்பனவு சங்கம் மாங்கேணியிலும் சிலாவத்துறையிலும் இரண்டு நிரந்தரமான ஐஸ்கட்டி செய்யும் யந்திரங்களையும் தென் கரையோரத்திலும் மேற்குக் கரையோரத்திலும் உள்ள பருவகால மீன்பிடி நிலையங்களுக்குப் பயன்படுவதற்காக இரண்டு நகரும் இயந்திரங்களையும் அமைப்பதற்கேதுவாக மேற்படி சங்கத்துக்குக் கடனென்றை அனுமதிக்கும்படி விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு கடற்றொழில் அதிபதிக்குச் சிபாரிசு செய்துள்ளது.**

அதிகமான ஐஸ்கட்டி செய்யும் யந்திரங்களை வழங்குதல், மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு கடற்றொழில் பகுதி தீட்டியுள்ள பூரண திட்டத்தின் ஒரு முயற்சியாகும்.

மீன்பிடி வர்த்தகத் தேவைகளுக்காக அரசாங்கத்துக்கும் தனியார் துறைக்கும் சொந்தமான பல்வேறு திறனுள்ள ஏராளமான ஐஸ்கட்டி செய்யும் யந்திரங்கள் ஏற்கனவே இருக்கின்றன.

தனியார் துறைகள் தற்போது இந்நாட்டின் பல்வேறு பாகங்களிலும் ஐஸ்கட்டி செய்யும் யந்திரங்களைப் பொருத்தி வருகின்றன வென்று கடைசியாக வெளிவந்த கடற்றொழில் அதிபதி

(3 ம் பக்கம் பார்க்க)

## மகாராணிக்குப் பிறந்ததின வாழ்த்துக்கள்

"மாட்சிமை தங்கிய தங்கள் பிறந்த தினத்தின்போது இலங்கை மக்களும் நானும் எங்கள் விசுவாசமுள்ள சேவையையும் இதயபூர்வமான நல்லாசிகளையும் மாட்சிமை தங்கிய தங்களுக்குச் சமர்ப்பிக்கிறேம்".

மாட்சிமை தங்கிய இரண்டாவது எலிசபெத் மகாராணியின் பிறந்த தினத்தை முன்னிட்டு மேன்மை தங்கிய மகா தேசாதிபதியவர்கள் மகாராணியவர்களுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தி, இது. பொது மக்களின் தகவலுக்காக இது பிரசுரிக்கப்படுகிறது என்று மகா தேசாதிபதியின் அலுவலகத்திலிருந்து 20.4.63 ல் வெளியான பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

## சமயபாட நினைவுறுத்தல் வகுப்புகள்

**இந்நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்குச் சமய பாட நினைவுறுத்தல் வகுப்புகளை நடாத்த கல்விப் பகுதி ஒழுங்குசெய்துள்ளது.**

சமயதாபனங்களின் துணையுடன் இப்பகுதி புதிய பாடத்திட்டங்களைத் தயாரித்து பாடசாலைகளுக்கு விநியோகித்தும் இருக்கிறது.

சமய பாடமானது இன்று பாடசாலைகளில் பாலர் வகுப்பு முதல் கல்விப் பொதுத் தராதரப்பத்திர வகுப்புவரை ஒரு கட்டாய பாடமாக இருக்கிறது. இன மதச்சார்பு முறைமையின் கீழ் சமயப்

(3 ம் பக்கம் பார்க்க)

## பூர்த்தியாகிவரும் காலித்துறைமுகம்



ஒரு கோடியே முப்பது லட்சம் ரூபா உத்தேசச் செலவில் கட்டப்படும் காலித்துறைமுகம் பூர்த்தியடைந்துவருகிறது. 1,400 அடி நீளமான அணையும் துறையினதும் 900 அடி அலைதாங்கியினதும் வேலை அநேகமாக முடிந்துவிட்டது. முழுவேலையும் அடுத்தவருடமுடிவுக்குள் பூர்த்தியாகிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# பாண்டிக் கோவை

**கா. பொ. இரத்தினம்**

பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் அகப்புறப் பொருள்கள் பற்றிய பலநூல்வகைகள் கூறப்பட்டுள. இந்நூல்வகைகளைத் தழுவிப் பிற்காலத்திற் பற்பல வகையான புதுநூல்கள் தமிழில் இயற்றப்பட்டன. இந்நூல்களைத் தொண்ணூற்றுருவகைப் பிரபந்தங்களாக வகுத்துள்ளர். இப்பிரபந்தங்களுக்கு இலக்கணங்கூறும் பாட்டியல் போன்ற இலக்கண நூல்களும் தோன்றியுள.

இத்தொண்ணூற்றுருவகைப் பிரபந்தங்களுள்ளே கோவைப் பிரபந்தமும் ஒன்றாகும். அகப் பொருள் இலக்கணத்துக்கு இலக்கியமாக இப்பிரபந்தம் இயற்றப்படும். இஃது குறிஞ்சி முதலிய ஐந்திணைகளையும் சிறப்புற விளக்கும்; தலைவன் தலைவியர்தம் காதல் வாழ்வினை உலகவழக்குக்கும் செய்யுள் வழக்குக்கும் இசையஎடுத்தியம்பும். நானூறுக்குக் குறையாத கட்டளைக் கலித்துறைகளைக் கொண்டதாயிருக்கும். காட்சி, ஐயம், துணிவு முதலிய அகப்பொருட்டுறைகளின் கோவையாதலின் இப்பிரபந்தம் கோவை எனப் பெயர் பெற்றது. இதனை ஐந்திணைக் கோவை எனவும், அகப்பொருட்கோவை எனவும் வழங்குதலுண்டு.

கோவைப் பிரபந்தத்துக்கு இருதலைவருளர். ஒருவர் கிளவித்தலைவர் எனவும் மற்றையவர் பாட்டுடைத்தலைவர் எனவும்படுவர். கிளவித்தலைவரே காதல் வாழ்வின் தலைமகனுவார். இவருடைய இயற்பெயரைச் சுட்டிக் கூறுவதில்லை. கூறப்படாதென விதிக்கவும் பட்டுளது. பாட்டுடைத்தலைவர் தெய்வங்களாக வேனும் சிறந்த பெருமக்களாக வேனும் இருப்பர். இவர்களின் பெயரும், பல்வகைச் சிறப்பும் கோவைப் பாடல்களில் இடம் பெறும்.

திருக்கோவையார், திருவெங்கைக் கோவை, திருவாவடுதுறைக் கோவை, முதலியன சிவபெருமான் மீது பாடப்பட்டவை. தஞ்சைவாணன் கோவை, கரவை வேலன் கோவை, பாண்டிக் கோவை முதலியன மக்கள்மீது பாடப்பட்டவை.

தமிழ் நூற்பரப்பிலே பல கோவைப் பிரபந்தங்களுள. இவற்றுள்ளே அசதிக் கோவை, அரையர் கோவை, அண்ணாமலைக் கோவை, காரிக்கோவை, தமிழ் முத்தரையர் கோவை, நத்திக் கோவை விஞ்சைக் கோவை முதலியன பல மறைந்து விட்டன. பாண்டிக் கோவை எனும் இப்பழைய கோவையினும் சில செய்யுள்கள் இப்பொழுது கிடைக்கவில்லை.

இக்கோவையின் செய்யுள்களில் இறையனார் அகப் பொருளுரையில் முந்நூற்றிபத்தொன்பது செய்யுள்கள் காணப்படுகின்றன. களவியற்காரிகையினும் கோவைக் கொத்து எனும் நூலினும் இக்கோவைச் செய்யுள்கள் சில உள. களவியற்காரிகை எனும் நூலும் முழுதுமாகக் கிடைக்கவில்லை. பாண்டிக் கோவை எனும் பெயர் இக்களவியற் காரிகையாலேயே அறியப்படுகிறது. வச்சணந்திமாலை உரையும் இலக்கணவிளக்க உரையும் பாண்டிக்கோவையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

இக் கோவையின் காலத்தையும், ஆசிரியர், பாட்டுடைத்தலைவர் என்போரைப்பற்றிய விவரங்களையும் நன்கு அறிய முடியவில்லை.

வச்சணந்திமாலை உரையில் செய்வித்தோனுற் பெயர்பெற்ற நூலுக்கு இப்பாண்டிக் கோவை உதாரணமாகக் கூறப்பட்டுளது. எனவே, பாண்டிய மன்னனுற் செய்விக்கப்பட்டமையால் இக் கோவை பாண்டிக்கோவை எனப்பட்டதெனலாம். நெடுமாறன் எனும் பாண்டிய மன்னனுடைய பெயர் இக் கோவைப் பாடல்களிற் பயின்று வருவதால் நெடுமாறன் எனும் பாண்டியனே இக்கோவையின் பாட்டுடைத் தலைவன் என்பவர். இந்நெடுமாறன் எக்காலத்திருந்தவன் என்பதை துணிந்துரைக்கப் பெருவாய்ப்பில்லை சங்க காலத்திலும், திருஞான சம்பந்தர் காலத்திலும், பின்னரும் நெடுமாறன் எனும் பெயருடைய பாண்டியர்கள் இருந்திருக்கின்றனர்.

இப்பாண்டிக் கோவையின் பாட்டுடைத் தலைவனாகிய நெடுமாறனைப் பற்றிய பல செய்திகள் இக்கோவைப் பாடல்களாற் புலப்படுகின்றன. இவனுக்குப் பராங்குசன் அரிகேசரி முதலிய பட்டப் பெயர்கள் உண்டு. இவன் சேர சோழ மன்னர்களையும் வேணாட்டரசரையும் வென்றவன் என்று போற்றப்படுகிறான். நெல்வேலி, பாழி, செந்நிலம், சங்கை மங்கை கோட்டாறு, நறையாறு, கடையல், சேவூர், பூலந்தை, விழிஞம், குளந்தை, களத்தூர், நெடுங்களத்தூர், வல்லம், ஆற்றுக்குடி, மணற்றி எனும் இடங்களில் நடந்த போர்களை வென்று புகழ்படைத்தவன் என்று பாண்டிக் கோவைச் செய்யுள்கள் இவனைப் பரக்கப் பாராட்டுகின்றன. இவனுடைய வீரச் செயல்களை விளக்கும் பாடல்கள் இவனுடைய பேராண்மையையும், பேரருளையும் அழகுறத் தீட்டிக் காட்டுகின்றன.

இப்பாடல்கள் குறிப்பிடும் போர்க்களங்களிலே, செந்நிலம், பாழி, நெல்வேலி முதலியவற்றை வேள்விகுடி சின்னமனூர்க் கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன. திருஞான சம்பந்தர் காலத்திருந்த நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறனே இந் நெடுமாறன் எனச் சிலர் கூறுகின்றனர். சங்க காலத்திலே கட்டளைக் . கலித்துறை தோன்றவில்லை. எனவே கட்டளைக் கலித்துறையால் ஆக்கப்பட்ட இப்பாண்டிக் கோவையின் பாட்டுடைத் தலைவனாகிய நெடுமாறன் சங்க காலத்துக்குப் பிற்பட்டவன் எனக் கூறல் நன்கு பொருந்தும். இவனுடைய சிவபத்தியையும் தமிழார்வத்தையும் இக் கோவைப் பாடல்கள் சிறப்புறச் செப்புகின்றனவாதலின் இவனைத் திருஞான சம்பந்தர் காலத்தவன் என்பார் கூற்று வலியுறுகின்றது.

இக்கோவையினைக் கோவைப் பிரபந்தங்களில் முதன்முதல் இயற்றப்பட்டதெனவும் சிலர் கருதுகின்றனர். இக்கோவையின் பாட்டுடைத் தலைவன் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்தவன் எனின், மாணிக்கவாசகருடைய திருக்கோவையாரே இக்கோவைக்கு முந்திய கோவை நூலாகும். கோவைகளின் முதனூலாகத் திருக்கோவையாரையே தமிழறிஞர்கள் கொண்டுளர். எனவே திருக்கோவையாருக்குப்பின் இயற்றப்பட்ட கோவைகளுள் காலத்தால் முந்தியதென இப்பாண்டிக் கோவையைக் கொள்ளலாம். அன்றியும் மக்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட முதற்கோவை இப்பாண்டிக் கோவையேயாகும். இறையனார் அகப் பொருளுரையிலே உதாரணமாகக் காட்டப்படும் இலக்கியச் செய்யுள்களிற் பெரும்பாலான இப்பாண்டிக் கோவையிலிருந்தே எடுக்கப்பட்டுள. இஃதும் இக்கோவையின் பழைமையினையும், முதன்மையினையும் நன்குபுலப்படுத்துகிறது.

இனி இப்பாண்டிக் கோவைச் செய்யுள்களின் நயத்தினைச் சிறிது காண்போம்.

கோவைப் பிரபந்தங்களின் முதலாவது துறை "காட்சி" எனப்படும். காட்சியாவது தலைமகனும், தலைமகளும் தனியராய் ஒருவரை ஒருவர் காண்பது. காணும் இருவரும் ஒருவரைப் பற்றி ஒருவர் எண்ணுவாரெனினும் கோவைநூல்களிற் பெரும்பாலும் தலைவன் காணும் காட்சியையே புலவர்கள் காட்டுவர்.

"பூமரு கண்ணிணை வண்டாப்
புணர்மென் முலை அரும்பாத்
தேமரு செவ்வாய் தளிராச் செருச்
செந்
நிலத்தை வென்ற
மாமரு தானைஎங்கோன்வையை
வார்பொழில் ஏர்கலந்த
காமரு பூங்கொடி கண்டே
களித்த வெங்கண்ணிணையே"

இப் பாடலில் தலைவன் தலைவியைக் கண்டகாட்சி தீட்டிக்காட்டப்பட்டுளது. தலைவியை ஓர் அழகிய பூங்கொடியாகத் தலைவன் காண்கிறான். தலைவியின் அழகிய கண்கள் வண்டுகளாகவும், கொங்கை அரும்பாகவும், வாய் தளிராகவும் அமைய அவள் வையைக் கரையில் ஒரு பூங்கொடியாகக் காட்சி அளிக்கிறாள். "செருச் செந்நிலத்தை வென்ற மாமருதானை எங்கோன்வையை வார்பொழில்" எனுந்தொடர் பாட்டுடைத் தலைவனையும் அவனுடைய வையை ஆற்றினையும் குறிப்பிடுகிறது. நெடுமாறன் பகைவர்களை வென்ற போர்க்களங்களில் "செந்நிலமும்" ஒன்றாகும். "பூமரு கண்ணிணை" எனவும் "புணர்மென் முலை" எனவும் "தேமரு செவ்வாய்" எனவும் தலைவன் தான் கண்ட உறுப்புக்களின் சிறப்புக்களைப் பொருத்தமான அடைகளாற் புலப்படுத்துகிறான்; தன் காட்சியின் சிறப்பும் பயனும் தோன்றக் "கண்டே களித்த எங் கண்ணிணையே" என்று பெருமிதத்துடன் கூறுகிறான்.

பூங்கொடியன்னாளை இவ்வாறு கண்டு களிப்படைந்த தலைவன் இத்தகைய அழகுடையவள் வானரமகளோ, நீரரமகளோ, வரையரமகளோ, சூரரமகளோ என்று ஐயங்கொள்கிறான். பின்வரும் செய்யுளில் அவனுடைய ஐயம் பொதியப்பட்டுள்ளது.

"உரையுறை தீந்தமிழ் வேந்த னுசிதன்
தென் நாட்டொளிசேர்
விரையுறை பூம்பொழின் மேனுறை
தெய்வங்கொல் அன்றிவிண்டோய்
வரையுறை தெய்வங்கொல் வானுறை
தெய்வங்கொல் நீர்மணந்த
திரையுறை தெய்வங்கொ லையந் தருமித்
திருநுதலே"

"விரை உறை பூம்பொழின் மேனுறை தெய்வம்" என்பது சூரரமகளையும், "விண்டோய் வரையுறை தெய்வம்" என்பது வரையரமகளையும், "வானுறைதெய்வம்" என்பது வானர மகளையும், "நீர்மணந்த திரையுறை தெய்வம்" என்பது நீரரமகளையுங் குறிக்கிறது.

பாட்டுடைத் தலைவனாகிய மாறனை "உரையுறை தீந்தமிழ் வேந்தன்" என்று குறிப்பிட்டுத் தமிழுக்கும் அவனுக்குமுள்ள தொடர்பை அழகாகப் புலப்படுத்துகிறார் ஆசிரியர். "உரையுறை தீந்தமிழ்" என்பது புகழ் மிக்க இனிய தமிழ் எனும் பொருளது.

தலைமகளின் அழகினைத் தான் நயக்குமாற்றைத் தலைமகன் தலைமகளுக்கு உணர்த்தும் முறை மிகுந்த நயம் வாய்ந்தது. வண்டுக்கு உரைப்பவன் போல அவன்தன் நயப்பை எடுத்துரைப்பான்.

"வேறுமென நின்றிகன் மலைந்தார்
விழிஞத்து விண்போய்
ஏறுந்திறங் கண்ட கோன்.தென் பொதி
யில் இரும்பொழில்வாய்த்
தேறுந் தகையவன் டேசொல்லு மெல்
லியல் செந்துவர் வாய்
நாறுந் தகைமைய வேயணி ஆம்பல்
நறுமலரே".

இந்தப் பாட்டில், தலைவியின் வாயினைப் போல மணக்கும் ஆம்பல் மலருண்டோ என்று வண்டே சொல்வாயாக என்று தலைவன் கேட்கிறான். "வேறுமென நின்று இகன் மலைந்தார் விழிஞத்து விண்போய் ஏறுந் திறங் கண்ட கோன் தென்பொதியிலுள்ள இரும்பொழிலின் வண்டாதலின்" தேறுந்தகைய வண்டு என்றான். தன்னொடு போரிட்டாரைச் சுவர்க்கம் புகச் செய்த பெருந்தன்மையானது பொதியமலைப் பொழிலின் வண்டாதலின் நீயும் பெருந்தன்மையுடையாய் ஆதலின் உன்னை நம்பலாம்; நீ உண்மையே சொல்வாய் என்று வண்டின் இடச்சிறப்பினால் வண்டுக்குப் பெருமையளித்துத் தலைவன் பேசுகிறான். தலைவியுடைய வாயின் வடிவும், மொழியும், நறுநாற்றமும் தோன்றச் "செந்துவர்வாய்" என்றும் அவளுடைய மென்மை இயல்புதோன்ற "மெல்லியல்" என்றும் தலைவன் குறிப்பிடுகிறான்.

வாய் திறந்து பேசாமல் இருப்பவர்களை வாய் திறந்தால் முத்து உதிருமோ என்று கேட்கும் வழக்கம் உண்டு. இவ்வழக்கம் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரும் தமிழ் நாட்டிலிருந்ததென்பதை இக்கோவைச் செய்யுள் ஒன்று நன்கு புலப்படுத்துகிறது.

தலைவியுந் தலைவனும் ஒருங்கு இருக்கும் பொழுது அவர்களைச் சந்தித்த தலைவன் அவர்களுடைய பதியும், பெயரும், பிறவும் வினவுகிறான். தலை

(3 ம் பக்கம் பார்க்க)

(2 ம் பக்கத் தொடர்)

வனுடைய வினாக்களுக்கு விடைகூறாமல் அவர்கள் இருக்கிறார்கள். அப்பொழுது தலைவன் கூறுவதாக அமைந்துள்ள பின்வரும் பாட்டில் "வாயைத் திறந்தால் முத்து உதிருமோ" எனுங் கருத்து வருகின்றது.

"தன்னும் புரையு மழையுமேறு தன்
றானை முன்னுற்
றுன்னுங் கொடிமிசை ஏந்தியகோன்
கொல்லிச் சூழ்பொழில்வாய்
மின்னுங் கதிரொளி வாண்முகத் தீரென்
வினவுரைத்தால்
மன்னுஞ் சுடர் மணி போந்துகுமோ
நுங்கள் வாயகத்தே".

இக்கோவைச் செய்யுள்கள் யாவும் இனிய சொல்லும் நல்லோசையும் பண்ணயங்களும் நிறைந்துள. தலைவியின் மாற்றங்கண்டு அவளையும் குறிப்பாகப் பார்த்து என்னையும் பார்த்தான் அன்னை என்று தோழி தலைவனுக்குக் கூறுஞ் செய்யுள் வண்ணம் எனுஞ் சொல்லைப் பல விடங்களிற் கொண்டு நல்லோசையமைந்து படிப்போரை இன்புறுத்தும் பாங்குடையது.

"நீர் வண்ணன் வெண்டிரை மேல்
நின்ற வேந்தன் நெல்வேலி
ஒன்னார்
போர் வண்ணம் வாட்டிய பூழியன்
பூந்தண் குருந்தொசித்த
கார் வண்ணன் போல்வண்ணன் காவிரி
நாடன்ன காரிகையாள்
ஏர் வண்ண நோக்கி நின்றென்னையு நோக்
கினளெம் மன்னையே".

இதுவே அச்செய்யுளாகும்.

பெரும்பாலும் கோவைப் பிரபந்தங்களில் ஒருதுறைக்கு ஒரு செய்யுளே அமைந்துளது. இக் கோவையிலோ சிலதுறைகளுக்குத் தனித்தனி மூன்று அல்லது நான்கு பாட்டுக்களுமுண்டு.

இக்கோவைச் செய்யுள்களாற் பல வரலாற்றுச் செய்திகளும் தமிழ் நாட்டின் பழக்க வழக்கங்களும் அறியப்படுகின்றன. நெடு மாறன் எனும் இப்பாண்டிய மன்னன் இடிக்கொடியை உடையவன் என்றும், சந்திர குலத்தவன் என்றும் இந்நூல் இயம்புகிறது. இவனுடைய முன்னோரின் செயல்களை இவனுடைய செயல்களாகவும் உரிமை காரணமாக ஆசிரியர் உரைத்துளர். இவன் அகத்தியன் பால் தமிழ் கேட்டவன் என்பதும், மீனை இமயத்திற் பொறித்தான் என்பதும் இத்திறத்தனவாகும். கொற்கை, தொண்டி, புகார், மாந்தை முதலிய துறைகளையும்; வையை, காவிரி முதலிய ஆறுகளையும் பற்றிய குறிப்புக்களும் இந்நூலிலுள. மதுரையம் பதியிலே புலவர்கள் கூடித் தமிழாய்ந்த செய்தியையும் "தொன்னூற் புலவர் ஆயுந் தமிழ் அரிகேசரிகூடல்" என்று இந் நூல் எடுத்துரைக்கிறது.

இலக்கிய நயமும், வரலாற்றுச் சிறப்பும், பழைமையும் வாய்ந்திலங்கும் இந்நூல் தமிழ் நூற் பரப்பில் ஒரு சுடர்மணியாக ஒளிர்கின்றது.

## "வாக்கி ...

(1 ம் பக்கத் தொடர்)

இரண்டு வருட காலத்துக்குப் பிரதி வருடமும் ஐம்பது வாக்கி திருக்டர்களை மட்டுமே வாங்கக்கூடியவகையில் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதை விஸ்தரிக்கும் திட்டம் மட்டுப்படுத்தப்படும்.

இக்கடன் வழங்கும் திட்டம் கமத்தொழில் சேவைப் பகுதியால் கையாளப்படும். இப்பகுதி பொருள் வகையாகக் கடன்களை வழங்கும். அதாவது இப்பகுதி வாக்கி திருக்டர்களைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அச்சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்கும் இயந்திரங்களை வழங்கும். இக்கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் :—

(அ) வாக்கி திருக்டர்களையும் உபகாரணங்களையும் தேர்ந்தெடுப்பது அவற்றை வாங்குபவரின் விருப்பத்தைப் பொறுத்திருக்கும்.

(ஆ) பெற்ற கடனை மூன்று வருட காலத்தில் ஆறுமாதங்களுக்கு ஒருதடவை தவணைப்பணங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

# குழந்தைகளுக்குப் பாலூட்டும் முறைகள்

உங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலைப்போல் சிறந்த உணவு கிடையாது. இயற்கை விதிக்கும் உணவும் அதுவேயாகும். தாய்ப்பால் ஏனைய உணவுகளை விட அதிக தூய்மை வாய்ந்தது. அதைப்போல் குழந்தைகளுக்கு ஊட்டமளிப்பதும், எளிதில் சீரணிப்பதுமான உணவு வேறெதுவுமில்லை. அதிலுள்ள உயிர்ச்சத்துக்களும் பிற குழந்தையுணவுகளில் கிடையாது.

இவ்வளவு சிறப்புவாய்ந்த தாய்ப்பால் அநேகமாக எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைக்கின்றதெனினும், தாய்ப்பாலூட்டும் முறையை அநேக தாய்மார் தெரிந்துகொள்ளாதிருப்பதால், அவர்களின் குழந்தைகள் சில வருத்தங்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாகின்றன. குழந்தை அழுதவுடன் பால் கொடுத்தால் போதும் என்று சில தாய்மார் நினைக்கிறார்கள். சிலர் தமக்கு வசதியான நேரங்களிலெல்லாம் குழந்தைக்குப் பாலூட்டுகிறார்கள். மேலும் அநேகர் நாளொன்றுக்கு இரண்டு தடவைகளோ, மூன்று தடவைகளோ பாலூட்டவேண்டுமென்பதற்காகப் பாலூட்டுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், கல்வியறிவற்ற மக்கள் பாலூட்டுவதில் பலபல வழிகளைக் கையாளுகிறார்கள் எனலாம். அவர்களின் குழந்தைகளும் வளருகின்றன ; பெரியவர்களாகின்றன. ஆனால் அக்குழந்தைகளுக்குச் சில நோய்களும், கஷ்டங்களும் ஏற்படும்போது அவற்றுக்குக் காரணம் பாலூட்டியபோது நிகழ்ந்த தவருகவும் இருக்கலாம் என்பது சிலருக்குத் தெரியாது. "பாலூட்டுவதில் என்ன நூதனம் இருக்கிறது ; குழந்தையைத் தூக்கிவைத்துத் தனக்காம்புகளை உறிஞ்சவைத்தால் விஷயம் முடிந்தது" என்று சில தாய்மார் கருதியிருக்கக்கூடும் என்பதற்காக பாலூட்டுவதில் எல்லோரும் தெரிந்திருக்க வேண்டிய சில முறைகளை இங்கு விவரிக்கிறோம்.

உங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டும் நேரம் இதோ வந்துவிட்டது. பால் கொடுப்பதற்காகக் குழந்தையைத் தூக்கி விட்டீர்கள். பால் கொடுக்கவும் தொடங்கி வீட்டீர்கள். குழந்தையும் பாலைக் குடிக்கிறது. ஆனால் உங்கள் தனங்கள் சுத்தமாக இருந்தனவா என்றோ, தனக் காம்புகளில் என்னென்ன அழுக்கும், கிருமிகளும் இருந்தன வென்றோ நீங்கள் யோசித்ததுண்டா? இல்லை. அதனால் குழந்தை பாலை மட்டும் குடித்ததா, நோய்க் கிருமிகளையும் உள்ளிழுத்துக் கொண்டதா என்பது உங்களுக்குத் தெரியாது. நாட்கள் சில செல்கின்றன. குழந்தை நோய்வாய்ப்படுகிறது. குழந்தை வைத்தியரிடமோ, பக்கத்துப் பரிகாரியாரிடமோ குழந்தையைக் கொண்டு ஓடுகிறீர்கள் வைத்தியம் நடைபெறுகிறது. குழந்தையும் பிழைத்துவிடுகிறது என்று வைத்துக்கொள்ளுவோம். இருந்தாலும் தாய்மார் தங்கள் தனங்களைச் சரியாகப் பேணாது விட்டமையும் குழந்தைகளின் நோய்க்கு ஒரு காரணமென நினைத்து உங்களுக்குச் சில புத்திமதிகளைக் கூற விரும்புகிறோம்.

1. நீங்கள் அணியும் உடை மிகவும் சுத்தமாக இருக்கிறதா என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள். உங்கள் தனங்களை மூடியிருக்கும், உட்சட்டை அல்லது பிரேசியரை நாள்தோறும் தோய்த்துக்கொள்ளுங்கள். தாய்ப்பாலூட்டுபவர்கள் அணிந்துகொள்ளக்கூடிய உட்சட்டை எப்படியிருக்க வேண்டுமென்பதை சௌக்கியப் பகுதித் தாதிமார்களும், மருத்துவமாதர்களும் உங்களுக்குச் சொல்லித் தருவார்கள்.

2. தினமும் குளிக்கும் பொழுது உங்கள் தனங்களைச் சவர்க்காரம் கொண்டு நன்கு தேய்த்துக் கழுவி, தோய்த்துலர்ந்த துண்டினால் நீரை ஒற்றி உளர்த்திக் கொள்ளுங்கள். உட்சட்டை அணியாமல், உடுத்திருக்கும் சேலையாலேயே தமது மார்பகங்களை மறைத்துக்கொள்ளும் பலர் நம் நாட்டில் இருந்து வருவதை நாம் இந்தக் காலத்திலும் காண்கிறோம். இவர்களெல்லாம் நாள் தோறும் குளித்துச் சுத்தமாயிருத்தல் நன்மை பயப்பதாகும். வெயிலில் உழைத்து வியர்வை சிந்த வீடு திரும்பும் பாட்டாளி மக்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்குமுன் தங்கள் உடம்பை முக்கியமாக மார்பகங்களைச் சுத்தமாகக் கழுவியபின் குழந்தைகளுக்குப் பாலூட்டப் பழகவேண்டும்.

3. வசதியில்லாதவர்கள், தங்கள் இல்லத்தில் கொதித்தாறிய நீரும், சுத்தமான சேலைத்துண்டுகளடங்கிய மூடியுடைய பாத்திரமும் வைத்திருக்க வேண்டும்.

4. குழந்தைகளுக்குப் பால் கொடுக்குமுன் கைகளை நீரும், சவர்க்காரமும் கொண்டு கழுவவேண்டும்.

5. கைகளை நன்கு கழுவிய பின் ஒரு சிரட்டைக்குள் அல்லது பாத்திரத்துள் கொதித்தாறிய நீரை ஊற்றி, அதில் சேலைத்துண்டைத் தோய்த்து தனக் காம்புகளை நன்றாகக் கழுவிக் கொள்ளுங்கள்.

இப்போது நீங்கள் குழந்தைக்குப் பாலூட்டத் தகுதியானவர்களாகிவிட்டீர்கள். உங்கள் தனங்கள் அதிக பால் சுரக்கும் நிலையிலிருப்பின், முதலில் சிறிதளவு பாலை கையால் பீச்சிவிட்டுப் பிள்ளைக்குப் பால் கொடுக்கத் தொடங்குங்கள்.

பால்கொடுக்கும்போது நீங்கள் சௌகரியமாக அமர்ந்திருக்க வேண்டும். நிலத்தில் அமர்ந்திருந்து பாலூட்டலாம். ஆசனத்திலிருந்து பாலூட்டுபவர்கள் கால்கள் நிலத்தில் முட்டக்கூடிய அளவு உயரமான ஆசனத்தில் இருந்தால் ஒரு சிறு பெட்டியின் மீதோ, வாங்கின்மீதோ கால்களை வைத்துக்கொள்ளலாம்.

குழந்தையைத் தூக்கி ஒரு கையால் அணைத்து வைத்துக்கொண்டு உங்கள் முழங்கை மடிப்பில் அதன் தலையைச் சாயவைத்துக்கொள்ளவும், குழந்தையின் மூக்கு தனத்துள் அமிழ்ந்து மூச்சுத் திணறுதபடி தனத்தை மற்றக்கையினால் பிடித்துக் கொள்ளவேண்டும். குழந்தையைப் பெற்ற பின்னர் தாய் படுக்கும் நிலையிலேயே இருந்தால், ஒரு பக்கமாகச் சரிந்து குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டும். அப்போது தாய் குழந்தையை ஒரு தலையணையுடன் சேர்த்துத் தன்னுடன் அணைத்து வதைத்துக்கொள்ள வேண்டும். குழந்தை மூச்சுவிடக் கஷ்டப்படும் வகையில் நெருக்கமாக அணைத்தலாகாது. அங்ஙனம் அணைத்தால் குழந்தை பால் குடிப்பதை விட்டுவிட்டு வாயினால் மூச்சிழுக்கத் தொடங்கிக் காற்றை வாயினால் விழுங்கும் பழக்க முடையதாகிவிடும். அது வாந்தி எடுக்க ஏதுவாகும்.

வயிற்றில் சீரணம் நடைபெறும்போது வாயுக்கள் உண்டாவது வழக்கம் அவை நாமறியாமலே வாய் வழியாக வெளியேறிவிடும். ஆனால் குழந்தைகளைப் பொறுத்தமட்டில், வயிற்றிலுள்ள வாயுவுடன் சீரணமாகிக் கொண்டிருக்கும் பாலும் வாயினால் வெளியாகும். இதனால் குழந்தை அடிக்கடி பசியால் அழும். இவ்வாறு நேராமல் இருப்பதற்கு, குழந்தை போதியளவு பால் குடித்ததும் அதனைத் தோளில் சார்த்தி வைத்துக் கொண்டு வாயுவெளியேறும் ஒலி கேட்கும்வரை முதுகில் மெதுவாகத் தட்ட வேண்டும்.

### பாலூட்டும் நேரங்கள்

குழந்தை பிறந்த முதல்நாள் 6 மணி நேரத்துக்கு ஒரு தடவை 5 நிமிடநேரம் தாயிடம் பால் குடிக்க வைக்கவேண்டும். இரண்டாவது நாளிலிருந்து 3 அல்லது 4 மணி நேரத்துக்கு ஒரு தடவை 10 நிமிடம் குடிக்க விடலாம். சில குழந்தைகள் 5, 6 நிமிடங்களில் தமக்கு வேண்டிய பாலைக் குடித்து விடுகின்றன. இன்னுஞ் சில 15–20 நிமிட நேரம் வரை எடுக்கின்றன. எப்படியாயினும், 20 நிமிடங்களுக்குமேல் எந்தக் குழந்தையையும் பால் குடிக்க விடாதீர்கள். இரவில் 10 மணிக்குப்பின் பால் கொடுத்தலும் கூடாது. நீண்ட நேரம் குழந்தை உறங்குவது நல்லது. முதல் சில நாட்களில் இரவு 2 மணிக்குக் குழந்தை விழித்து அழக்கூடும். அப்போது கொதித்து ஆறிய இளஞ்சூடான நீரை வெறுமனே கொடுத்துப் பழக்கினால் 2 மணிக்கு விழிக்கும் பழக்கமே அற்றுப் போய்விடும்.

ஆறு மாதம் வரை குழந்தையின் இரைப்பை பாலை மட்டுமே சீரணிக்கக் கூடியதாக இருக்கும் அதுவரை உமிழ் நீர் சுரப்பதில்லை. எனினும் 9 மாதங்கள் வரை தாய்ப்பால் கொடுத்த பின்னரே தாய்ப்பால் குடிப்பதை மறக்கச் செய்ய முயற்சிக்கலாம்.

(சுகமணி)

## சமய பாட....

(1 ம் பக்கத் தொடர்)

போதனையைப் பெற முடியாதிருந்த பிள்ளைகளுக்கு அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின்பு, தற்பொழுது அவர்கள் பெற்றோரின் சமயத்தில் போதனைகள் அளிக்கப்படுகின்றன.

ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளில் கூட சமயம் ஒரு கட்டாய பாடமாக ஆக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிள்ளையும் தனது சமயக் கொள்கைகளின் போதனைகளைப் பெறுவதை நிச்சயித்துக் கொள்ளும் பொருட்டு, எதிர்காலத்தில் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கும்போது ஒவ்வொரு பாடசாலையிலும் உள்ள பெரும்பாலான பிள்ளைகள் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ அதே சமயத்தைச் சேர்ந்த ஒருவரையே அப்பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராக கல்விப் பகுதி நியமிக்கும்.

## மீன் விற்பனைச்....

(1 ம் பக்கத் தொடர்)

யின் நிருவாக அறிக்கை கூறுகிறது. கரையூர், பேசாலை, பத்துலுஓயா ஆகிய இடங்களிலுள்ள இப்பகுதியின் ஐஸ் கட்டி செய்யும் யந்திரங்கள் மீன்பிடி வர்த்தகத்துக்கு ஐஸ்கட்டி விற்பனை செய்ததன்மூலம் 70,626 ரூபா மொத்த இலாபமடைந்திருக்கிறதென்றும் அந்த நிருவாக அறிக்கை கூறுகிறது.

இலங்கைக் கூட்டுறவு மீன் விற்பனவுச் சங்கம் அமைக்க விருக்கும் ஐஸ் கட்டி செய்யும் யந்திரங்கள் ஐஸ்கட்டித் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாது தனிப்பட்ட வர்த்தகத்துக்கும் பயன்படும்.

# இலங்கை வானொலி நிகழ்ச்சிகள்

**28.4.63 தொடக்கம் 30.4.63 வரை**

## தேசீய ஒலிபரப்பு

### ஞாயிறு
**ஏப்ரல் 28**

காலை

- 6-45 பாமாலை‡
- 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை— வண. பிதா. சீ. ஏ. ஜோக்கிம்பிள்ளை
- 7-00 செய்திகள்
- 7-10 அறிவிப்புகள்
- 7-15 தேர்ந்த இசை†
- 7-45 திரை இசை†
- 8-15 தமிழ்மூலம் சிங்களம் மறுஒலிபரப்பு
- 8-30 **ஞானாஞ்சலி—** (மறுஒலிபரப்பு)
- 9-00 இஸ்லாமிய சமய பாடசாலை— நடத்துபவர் : இஸட். எல். எம். முஹம்மத்
- 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி— நடத்துபவர் : டாசன் பர்னாண்டோ
- 10-00 ஒலிபரப்பு முடிவு

பகல்

- 11-30 சிறுவர் மலர்— தயாரிப்பு : வானொலி மாமா
- 12-15 நேயர் விருப்பம்†
- 12-45 செய்திகள்
- 12-55 அறிவிப்புகள்
- 1-00 **மாதர் பகுதி—**
  - (1) சிறுகதை நாடகம்— எழுதியவர் : எஸ். றீற்ரு
  - (2) பாட்டு—
  - (3) தொழில் துறைகள்—பேச்சு
- 1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

- 5-00 **சிறுவர் பகுதி—** பிறந்ததின வாழ்த்துக்கள்
- 5-15 பாட்டு‡
- 5-45 திரைக்குரல்
- 6-00 செய்திகள்
- 6-10 வாத்ய இசை
- 6-15 பூசையும் கூட்டுப் பிரார்த்தனையும் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலிலிருந்து அஞ்சல்
- 7-15 மாதர் கேட்டவை
- 7-30 பாட்டு— பி. வி. கோபால கிருஷ்ணன்
- 8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி—** மணிமொழிகள் மௌலவி ஸெய்யது பஸ்லுள்ளாஹ்
- 8-15 மாணவர் மன்றம்— ஸாஹிரா கல்லூரி, கொழும்பு—10.
- 8-30 " பிர்தௌஸி "— சித்திரம் (மறுஒலிபரப்பு)
- 9-00 செய்திகள்
- 9-10 அறிவிப்புகள்
- 9-15 நாடக அரங்கு— **" எதிர்பார்க்கவேயில்லை "** எம். மகாலிங்கம் எழுதியது
- 10-30 ஒலிபரப்பு முடிவு

### திங்கள்
**ஏப்ரல் 29**

காலை

- 6-45 பாமாலை‡
- 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை‡ வண. பிதா. சீ. ஏ. ஜோக்கிம்பிள்ளை
- 7-00 செய்திகள்
- 7-10 அறிவிப்புகள்
- 7-15 மூவர் இசை
- 7-45 திரை இசை†
- 8-15 இஸ்லாமிய கீதம்†
- 8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

- 12-00 சித்திரகானம்
- 12-35 செய்திகள்
- 12-55 அறிவிப்புகள்
- 1-00 கதம்ப இசை‡
- 1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

- 5-00 **சிறுவர் பகுதி—** பிறந்ததின வாழ்த்துக்கள்
- 5-15 நிலைய ஒலிப்பதிவுகள்
- 5-45 திரை இசை
- 6-00 செய்திகள்
- 6-10 விலைவாசிகள்
- 6-15 **கிராம சஞ்சிகை—** தேசவளம் கிராமியப்பாடல்
- 6-45 வயலின்‡
- 7-00 நேயர் விருப்பம்†
- 7-30 வீணை எஸ். சீதாராம்
- 8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி—** உறுதுப் பாடல்கள்†
- 8-30 செய்தித் தொகுப்பு
- 8-45 பாட்டு— ஏ. ஆர். ஜெயினுலாப்தீன்
- 9-00 செய்திகள்
- 9-10 அறிவிப்புகள்
- 9-15 தமிழ்மூலம் சிங்களம்—மறு ஒலிபரப்பு
- 9-30 இசையமுதம்
- 9-45 பாட்டு— எஸ். பாலசிங்கம்
- 10-30 ஒலிபரப்பு முடிவு

### செவ்வாய்
**ஏப்ரல் 30**

காலை

- 6-45 உதயகீதம்
- 6-50 சைவ நற்சிந்தனை— குல சபாநாதன்
- 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை— ஐ. எல். முகம்மது முத்து
- 7-00 செய்திகள்
- 7-10 அறிவிப்புகள்
- 7-15 தேர்ந்த இசை
- 7-45 திரை இசை
- 8-15 இஸ்லாமிய கீதம்
- 8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

- 12-00 சித்திரகானம்
- 12-45 செய்திகள்
- 12-55 அறிவிப்புகள்
- 1-00 கதம்ப இசை
- 1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

- 5-00 **சிறுவர் பகுதி—** " பிறந்ததின வாழ்த்துக்கள் "
- 5-15 வளரும் பயிர்
- 5-45 திரை இசை
- 6-00 செய்திகள்
- 6-10 விலை வாசிகள்
- 6-15 **கிராம சஞ்சிகை—** உணவுப் பெருக்கம் தேசவளம்
- 6-45 புல்லாங்குழல்
- 7-00 நேயர் விருப்பம்
- 7-30 இருபது கேள்விகள்—22வது நிகழ்ச்சி தயாரித்தளிப்பவர் " சானா "
- 8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி—** நேயர் கேட்டவை (நிலைய ஒலிப்பதிவுகள்)
- 8-30 பேச்சு— " இறை தூதர்களின் இறை அச்சம் "— எம். எல். முஹம்மது
- 8-45 பாட்டு— ஓ. ஷரீப்
- 9-00 செய்திகள்
- 9-10 அறிவிப்புகள்
- 9-15 கலை ஏடு—நாடகம் : கவியரசர் தாகூர் எழுதிய " சித்ரா " தமிழ் உருவம்— செல்வநாயகம் சின்னையா
- 9-45 நாகசுரம்— பி. வெள்ளைச்சாமி
- 10-30 ஒலிபரப்பு முடிவு

# மூட்டைப்பூச்சி

மூட்டைப்பூச்சியை மூட்டுப்பூச்சி யென்றும் அழைப்பர். இது பொதுவாக மனிதர் வசிக்கும் இடங்கள், உபயோகிக்கும் தளபாடங்கள் பிரயாணஞ் செய்யும் வாகனங்கள் என்பவற்றில் அதிகமாகக் காணப்படுகிறது. சுத்தமாகப் பேணப்படும் வீடுகள், வாகனங்கள், தளபாடங்கள் என்பவற்றில் ஒருவேளை மூட்டைகள் இல்லாமலிருக்கலாம். ஆனால் ஏனைய இடங்களில் மூட்டைகள் இருக்குமென நிச்சயமாக நம்புவதற்கு இடமுண்டு. ஒருவர் தனது வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கக் கூடும். ஆனால் அவர் சுத்தமில்லாத இன்னொரு வீட்டுக்குச் சென்று அங்குள்ள ஆசனமொன்றில் அமர்ந்திருந்து தன்வீடு வரும்போது அவருடைய உடைமூலமாக மூட்டையும் வந்து சேரலாம். அது மாத்திரமன்றி வீட்டுக்கு வீடு மாறும் பெட்டி படுக்கைகள் முடிச்சுக்கள் போன்றவற்றுலும் மூட்டைப்பூச்சிகள் பரவுகின்றன.

இவ்வாறு மனித சஞ்சாரமுள்ள இடங்களெல்லாம் பரவி வரும் மூட்டைப் பூச்சிகளைப் பற்றிப் பகல் நேரத்தில் எவரும் யோசிப்பதில்லை. அந்நேரத்தில் மூட்டைகளும் தம்முடைய ஆசைகளை அடக்கிக் கொண்டு ஒழித்து விடுகின்றன. தப்பித் தவறி வெளிவந்தால் அவை பெரும்பாலும் நசுக்கப்படுகின்றன. ஆனால் இரவில் மனிதர் எவ்வளவுதான் முயன்றுலும் மூட்டைப்பூச்சிகள் தமது வல்லமையைக் காட்டப் பின்வாங்குவதில்லை. நன்றுக நித்திரை செய்பவர்களுக்கு மூட்டை கடிப்பதே தெரியாது. ஆனால் மூட்டைக்கடி பொறுக்க முடியாமல் விழித்துக்கொள்பவர்களும் அநேகர் இருக்கிருர்கள். விளக்கேற்றி மூட்டைகளைக் கொல்ல நினைப்பவர்களின் கண்களில் தென்படாமல் அவை எங்கெங்கோ ஓடி மறைந்துவிடுகின்றன.

சில கடைகளிலும் வீடுகளிலும் வசிப்பவர்கள் இரவில் விழித்திருந்து சுவர்களிலுள்ள மூட்டைகளைச் சுடுவதற்கு மண்ணெண்ணெய்க் கைவிளக்குகளை உபயோகிப்பதை நீங்கள் பார்த்திருக்பீர்கள். சிலர் பாயைச் சுருட்டிக் கொண்டு வேறிடத்தில் போய்ப்படுத்துக் கொள்கிருர்கள். இவ்வாருன பல கஷ்டங்களைக் கொடுக்கும் மூட்டைப்பூச்சிகளைப் பற்றியும் அவற்றை ஒழிக்கும் முறைகளைப்பற்றியும் நீங்கள் அறிந்திருக்க வேண்டிய சில விவரங்கள் வருமாறு :—

மூட்டைப்பூச்சிகள் புறவொட்டுண்ணிகளாக மனிதனின் இரத்தத்தை உறிஞ்சி வாழ்கின்றன. இவற்றின் உடல் அகன்று, தட்டையாகச் செம்பழுப்பு அல்லது கருமையான செம்பழுப்பு நிறத்தில் இருக்கும். இவற்றிற்குச் சிறகுகள் இல்லை. ஆனால் வெகு துரிதமாக ஓடக்கூடியவகையில் ஆறுகால்கள் இருக்கின்றன. இதன் வாயுறுப்புக்கள் தோலைக்குத்தித் தொளைப்ப தற்கும், இரத்தத்தை உறிஞ்சுவதற்கும் ஏற்றனவாக அமைந்துள்ளன. உடம்பின் பெரும்பாகத்தை விறைப்பான மயிர் போர்த்திருக்கும்.

மூட்டைப்பூச்சிக்கு ஒருவித அருவருப்பான நாற்றம் உண்டு. இத்துர்நாற்றம் மற்றப்பூச்சிகளிலிருந்து இதனைப் பாது காப்பதற்கு உதவுகின்றதெனினும், கரப்பான் பூச்சிகளும், சிவப்பெறும்பும் இதனைப் பெரும்பாலும் கொன்று தின்கின்றன.

மூட்டைப்பூச்சி 4, 5 நிமிஷத்தில் தான் குடிக்கக் கூடிய முழு அளவு இரத்தத்தையும் உறிஞ்சிவிடும். அப்போது அதன் உடல் உருண்டு இரத்தத்தால் நிறைந்து விம்மிக் காணப்படும். ஒரு தடவைகுடித்த இரத்தம் செமிப்பதற்கு ஏறக்குறைய ஒரு வாரம் ஆகுமெனச் சொல்லப்படுகிறது. எனினும் மறுநாளோ, இரண்டாம் நாளோ திரும்பவும் கடித்து உறிஞ்சும்.

இது அதிக நாட்களுக்குப் பட்டினி கிடந்தாலும் சாகமாட்டாது. ஒரு வருடம் வரையில் கூட உணவில்லாமல் உயிர் வாழும். அப்போது அதன் உடல் மெல்லிய உலர்ந்த செதில்போல் காணப்படும். ஒரு வீடு பல மாதங்கள் வசிப்பாரின்றி மூடிக்கிடந்தாலும் அங்கு மூட்டைப்பூச்சி அற்றுப்போவதில்லை.

இது சந்து பொந்துகளிலும், வெடிப்புகளிலும் முட்டையிடுகிறது. ஒரு நாளைக்கு 3, 4 முட்டைகளாக 200 முட்டைவரை இட்டுக்கொண்டே போகும். முட்டைகள் 4-8 நாட்களில் பொரிக்கின்றன.

ஒழிக்கும் வகை :—

(1) சந்து பொந்துகளையும் வெடிப்புக்களையும் அடைத்து வீட்டுக்கு ஒழுங்காக வெள்ளையடிக்க வேண்டும். வெள்ளையடிக்கும்போது பீனுல் எனும் திரவத்தைத் கலந்து இரண்டு, மூன்று தடவை அடிப்பதால் சுவரில் உள்ள மூட்டைப் பூச்சிகள் அற்றுப் போகும்.

(2) டி. டீ. ரி. யைப் பயன்படுத்தலாம்.

(3) போமலின் புகை பிடிக்கலாம்.

(4) கார்பலிக்திராவகம் தெளிக்கலாம்.

(5) பினிற் திராவகம் தெளிக்கலாம்.

(6) மூட்டையிருக்கும் தளபாடங்களையும், தலையணைகளையும் அடிக்கடி வெயிலில் காயவிடுவதால் இதன் விருத்தியைக் குறைக்கலாம்.

கமெக்வலீன் எனும் ஓர் நாசினியும் வேறு பல மூட்டைப்பூச்சி மருந்துகளும் கடைகளில் விற்பனையாகின்றன. அவற்றை வாங்கும்போது உபயோகிக்கும் முறைகளையும் கேட்டறிந்து கொள்ளுங்கள். இருந்தாலும் நீங்கள் உங்கள், வீட்டையும், தளபாடங்கள் போன்றவற்றையும் துப்புரவாக வைத்துக் கொள்வதில் கவனஞ் செலுத்திஞல் மூட்டைப் பூச்சித் தொந்தரவை ஆரம்பத்திலேயே தவிர்க்கக் கூடியவர்களாவீர்கள். (சுகமணி)

## 24,000 ஆசிரியர்கள்
### கடந்த ஆறுவருட காலத்தில் நியமனம்

கல்விப் பகுதி கடந்த ஆறு ஆண்டு காலத்தில் 24,000 க்கு அதிகமான ஆசிரியர்களை இந்நாட்டிலுள்ள பல்வேறு பாடசாலைகளுக்கு நியமித்திருக்கிறது. 1956 ஆம் ஆண்டில் 52,150 ஆக சேவையிலிருந்த ஆசிரியர்களின் தொகை கடந்த ஆண்டு இறுதியில் 76,329 ஆக அதிகரித்தது.

இக்காலத்தில் இப்பகுதி ஏறத்தாள 3 கோடி ரூபா செலவில் பல்வேறு ஆசிரிய கலாசாலைகளில் 14,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் அளித்தது.

ஹிங்குராகொடையில் நிறுவப்பட்ட ஒரு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையுடன் சேர்த்து 1962 ஆம் ஆண்டில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் எண்ணிக்கையும்கூட 26 ஆக அதிகரிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் மட்டும் 2,626 ஆசிரியர்கள் பயிற்சி கலாசாலைகளிலிருந்து சித்தியெய்தி வெளியேறினர். 1956 இல் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்களின் தொகையிலும் பார்க்க இது 1,220 அதிகமாக உள்ளது.

பலதரப்பட்ட துறைகளில் ஆர்வத்தையுண்டு பண்ணக்கூடிய பாடவிதானமொன்றைப் பாடசாலைகளுக்கு அளித்தற்பொருட்டு கடந்த ஆண்டில் அரசாங்கப் பாடாலைகளில் ஆசிரியர்கள் பலர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவர்களில் இசை, நடண, உடற்பயிற்சிப் போதஞசிரியர்களும் கைப்பணி ஆசிரியர்களும் அடங்கும்.

இடைக்காலத்தில் ஒரே விதமான தகைமை பெற்ற சுயமொழி ஆசிரியர்களுக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை நிவிர்த்தி செய்வதற்கும் இப்பகுதி நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இன்று சுயமொழி ஆசிரியர்கள் விசேட பதவிகளை வகிப்பதற்கான உயர்ச்சியைப் பெறுதற்குத் தகைமை பெற்றிருக்கிருர்கள். சுயமொழிப் பாடசாலைகளிலுள்ள அனுபவம் மிக்க தலைமை ஆசிரியர்கள் பாடசாலைப் பரிசோதகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷஞல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற பதிப்பிக்கப்பெற்றது.

ஆர். 9202—5,008 (4/63)